# முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப வகையைச்சாராத 02 ஆளணி வகை (ஆவண உதவியாளர்கள் ) II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டலப் பரீட்சை - 2018

முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப வகையைச்சாராத 02 ஆளணி வகை (ஆவண உதவியாளர்கள் ) II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டலப் பரீட்சை – 2018

பொதுச்சேவை ஆணைக் குழுவால் அனுமதியளிக்கப்பட்ட PS/ET/3/1/25/1/1 ஆம் இலக்க 12.07.2011 அம் திகதிய ஓய்வூதியத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப வகையைச்சாராத 02 ஆளணி வகை (ஆவண உதவியாளர்கள் ) II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 8 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப வகையைச்சாராத 02 ஆளணி வகை (ஆவண உதவியாளர்கள் ) II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டலப் பரீட்சை – 2018 ஆனது இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அக்டோபர் மாதம் 2018 ஆம் ஆண்டு நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. இப்பரீட்சை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப வகையைச்சாராத 02 ஆளணி வகை (ஆவண உதவியாளர்கள் ) II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கு கொழும்பில் மாத்திரம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. **தகுதிகள் :** முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப வகையைச்சாராத 02 ஆளணி வகை (ஆவண உதவியாளர்கள் ) II ஆம் தரத்தினையுடைய பதவியணிக்கு நியமனம்பெற்ற அலுவலர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவராகின்றனர்.

04. **விண்ணப்பம் :**

(i). இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக இப்பரீட்சைக்கான விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். A 4 தாளின் முதற் பக்கத்தில் 1.0 தொடக்கம் 5.0 வரையான பகுதிகளும் மற்றைய பங்கங்களில் ஏனைய பகுதிகளும் அமையும் வண்ணம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை முழுமையாகப் பூரணப்படுத்தி திணைக்கள / அலுவல/ நிறுவனத் தலைவரால் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுறுதிப்படுத்தப்பட்டு திணைக்களத் / அலுவலகத்/ நிறுவனத் தலைவரூடாகப் பதிவுத் தபாலில் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னராகக் கிடைக்கக் கூடியதாக **"பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம், செயலகக் கட்டடம், மாளிகாவத்தை, கொழும்பு 10."** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தின் மூலப் பிரதியையே கட்டாயமாக அனுப்புமாறு விண்ணப்பதாரிகளிற்கு அறிவுறுத்தல் வழங்கப்படுவதுடன் நிழல்ப்படப் பிரதியை அனுப்புவதைத் தவிர்க்குமாறு வலியுறுத்தப்படுகிறது. மெலும் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தின் நிழல்ப்படப் பிரதியொன்றைத் தம்முடன் வைத்திருக்குமாறு அறிவுறத்தப்படுகிறது. கடித உறையின் மேல் இடது முலையில் விண்ணப்பப் படிவத்தில் காணப்படுவதபோல் பரீட்சையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். பொருத்தமான தகவல்கள் வழங்கப்படாத மற்றும் இறுதித் திகதிக்குப்பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**(ii). பரீட்சைக் கட்டணம் :** முதற் தடவையா பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. எவ்வாறாயினும் அடுத்தடுத்த தடவைகள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடவிதானத்திற்கு 150 ரூபாவும் ஒன்றுக்கு மேற்பட்ட அல்லது அனைத்து பாட விதானங்களிற்கும் 250 ரூபாவும் செலுத்துவதுடன் , இத் தொகையை பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம், மக்கள் வங்கி, குயின் கிளை, 033100169026657 எனும் வங்கிக்கணக்கிற்கு வரவுவைத்து பெறும் சிட்டையை பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தில் பொருத்தமான கூண்டில் கழராதவாறு ஒட்டி சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அச்சிட்டையின் நிழறபடப் பிரதியொன்று தம்முடன் வைத்திருக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. என்நிலையிலும் தங்களால் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீள்ளளிக்கப்படமாட்டாது என்பதுடன் காசுக் கட்டளைகளோ முத்திரைகளோ பரீட்சைக் கட்டணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**05. விண்ணப்பதாரியின் அள் அடையாளம் :** பரீட்சை நிலையங்களில் ஒவ்வொரு பாடவிதானப் பரீட்சைகளிற்கும் மேற்பார்வையாளரால் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அவர் திருப்தியுறும் வகையில் பரிட்சார்த்தி தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். ஆகையால் கீழ் வரும் எவையாவது ஒன்றை மெற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

i. அட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

பரீட்சார்த்தி மேற்குறித்த எவையேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அப்பரீட்சார்த்தியினது பரீடசைக்கு தோற்றும் சந்தர்ப்பத்தை இரத்துச் செய்வது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் சுயேட்சையாக முடிவெடுப்பார். விண்ணப்பதாரி மேற்குறித்த சட்டதிட்டங்களை மீறும் சந்தர்ப்பத்திலும் இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் எவையேனும் தண்டனை விதிக்க முடியும்.

06. இறுதித் திகதிக்கு முன்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கான விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் பரீட்சை அனுமதியட்டை மற்றும் நேர அட்டவணையின் பிரதி ஆகியவை இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அனுப்பி வைக்கப்படும். தமது கையொப்பம் இடப்பட்டு சான்றுறுதிப்படுத்திய அனுமதியட்டையை பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரீட்சை நிலையமேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு : ஒரு பரீட்சார்த்திக்கு அனுமதியட்டை வழங்கப்படுவதால் அவர் பரீட்சையைத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருத முடியாது.

07. இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அனுமதியட்டை அனுப்பப்பட்ட முதற்தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவரால் கடமை விடுமுறை அனுமதிக்கப்பட்வேண்டும். ஆயினும் பயணப்படிகள் எவையும் வழங்கப்பட மாட்டாது.

08. பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இருமொழிகளில் நடைபெற வேண்டும். இப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்தி கல்விகற்ற ஊடக மொழியிலோ அல்லது அரச கரும மொழியிலோ தோற்றமுடியும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் எக்காரணம்கொண்டும் பின்னர் மாற்றப்பட முடியாது.

09. அலுவலர் தனது சுய விருப்பின் பேரில் இப்பரீட்சைக்கு தனித் தனிப் பாடங்களாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும். எவ்வாறெனினும் ஒவ்வொரு பாடத்திற்கும் நாற்பது (40%) புள்ளிகள் பெற்றுக் கொண்டால் மட்டுமே சித்தியடைந்ததாகக் கொள்ளப்படும்.

10. பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் புள்ளிகள் இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தால் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்படும்.

**11. பரீட்சை நடைமுறை :** விண்ணப்பதாரி பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மற்றும் செயல் முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும் ;

| | *பாடம்* | *மொத்தப் புள்ளி* | *நேரம்* | *பாட இலக்கம்:* |
|---|---|---|---|---|
| 1. | ஓய்வூதிய திணைக்களத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் | 100 | 1 மணித்தியாலம் | 01 |
| 2. | கணினி அறிவு (செயல்முறை அறிவை அளவிடுவதற்கான பரீட்சை) | 100 | 1 மணித்தியாலம் | 01 |

**12.1** ஓய்வூதிய திணைக்களத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்:

i. சிவில் ஓய்வூதியத் திட்டம் (02 ஆம் இலக்க 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 அம் திகதிய ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மற்றும் திருத்தம்.)
ii. விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (1898 ஆம் 01 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் நிதியச் சட்டம்).
iii. விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (1983 ஆம் 24 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் நிதியச் சட்டம்).
iv. ஆயுதப் படையினரது விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (1970 ஆம் 18 ஆம் இலக்க) ஆயுதப் படையினர் விதவைகள் அநாதைகள் நிதியச் சட்டம் .
v. படையினரது விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (1998 ஆம் 60 ஆம் இலக்க ) ஆயுதப் படையினர் விதவைகள் அநாதைகள் நிதியச் சட்டம் .
vi. மாகாணசபை ஓய்வூதியத் திட்டம் (1974 ஆம் 16 ஆம் இலக்க மாகாணசபைகள் சேவை சடடம் மற்றும் 1952 இன் மாகாணசபை விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் சட்டம்).
vii. பொதுச் சேவை நம்பிக்கை நிதியச் திட்டம் (1942 ஆம் 18 ஆம் இலக்க பொதுச் சேவை நம்பிக்கை நிதியச் சட்டம்,).

**12.2** *கணினி பரீட்சை* (கணனி அறி வைப் பரீட்சிக்கும் நோக்கில்) – MS Word, Excel, Access, Power Point மற்றும் Computer Data entry ஆகிய விடயப்பரப்பில் உள்ள கணினி அறிவைப் பரீட்சித்தல்.

**13.** பரீட்சை முடிவுக்ள மீள் திருத்தம் செய்யப்பட மாட்டாது என்பதுடன் இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தால் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதாகும்.

**14.** இவ்வறிவித்தல் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றிற்கிடையே எவையேனும் வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பம் ஏற்படின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே திருத்தமானதாகக் கொள்ளப்படும். இங்கு வழங்கப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

ஏ.ஜகத். டி .டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர்நாயகம்.
ஓய்வூதியத் திணைக்களம்

ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
...... செப்தெம்பர் 2018

## மாதிரி விண்ணப்பப் படிவம்

## முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப வகையைச்சாராத 02 ஆளணி (ஆவண உதவியாளர்கள் ) II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல்ப் பரீட்சை - 2018

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 1
தமிழ் -2 [ ]
(உரிய இலக்கத்தைக் கூண்டினுள் இடவும்)

1.0 1.1 முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டுப் பெயர் : ……………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்துகளில்)
*உ.ம்* :- GUNAWARDANE, M.G.B.S.K.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ……………………………………………………………….
( தமிழில்/சிங்களத்தில் )

1.3 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் : ……………………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

1.4 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் : ……………………………………………………
( தமிழில்/சிங்களத்தில் )

2.0 கடமையாற்றும் சேவை நிலையம் :

2.1 அலுவலகம்/திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர்: ……………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

2.2 அலுவலகம்/திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர்: ……………………………………………
( தமிழில்/சிங்களத்தில் )

2.3 அனுமதியட்டை அனுப்ப வேண்டிய முகவரி: ……………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

3.0 பால் :
பெண் - 1
ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தைக் கூண்டினுள் இடவும்)

4.0 தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

5.0 நீங்கள் தெரிவு செய்யும் பாடங்கள் :

| *பாடம்* | *பாட இல.* |
|---|---|
| 1. | |
| 2. | |

6.0 தற்போதான பதவி :

6.1 பதவி : ……………………………………………………………………………………

6.2 நியமனக் கடித இலக்கம் : ……………………………………………………………………

6.3 ஆவண உதவியாளர் தரம் II இற்கு நியமனம் பெற்ற திகதி : ……………………………

7.0. முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகிறீரா?………………………………………………

7.1 இல்லையாயின் பரீட்சைக் கட்டணமாக செலுத்திய தொகை:…………………………

7.2 வங்கி மற்றும் கிளை:……………………………………………………………

7.3.திகதி:………………………………………………………………………………………

| |
|---|
| மொத்தப் பரீடசைக் கட்டணம் ரூ 250/= மற்றும் ஒரு பாடமெனின் ரூ 150 /= செலத்துவதுடன் பணம் கட்டியபின் பெறப்படும் சிட்டையை கழராதவாறு இக் கூட்டினுள் ஒட்டவும். |

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

என்னால் மேலே வழங்கப்பட்ட தகவல்கள் சரியானவை என்பதையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீடசைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியைக் கொண்டுள்ளேன் என்பதையும் தெரிவிக்கறேன். இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் விதிக்கப்பட்ட இந்த பரீட்சைக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை ஏற்றுக் கொண்டு பின்பற்றுவதற்கு உடன்படுகிறேன்.

திகதி:……………………………..

……………………………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

*குறிப்பு* : விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் முன்பாகவோ அல்லது அவருக்குப் பதிலாகக் கையொப்பம் இடும் அதிகாரமுள்ள அலுவலர் முன்பாகவோ இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தைச் சான்றுறுதிப்படுத்தல்**

எனது சேவை நிலையத்தில் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …………………………… …………………………… என்பவரை தனிப்பட்டமுறையில் அறிவேன் என்பதையும் அவர் என் முன்னிலையில் ……………… ஆம் திகதி கையொப்பம் இட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறென்.

……………………………………………………

சான்றுறுதிப்படுத்துபவரது கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி: ……………………………………………………

பெயர்: ……………………………………………………

பதவி: ……………………………………………

முகவரி: ………………………………………………

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

I. மேலே வழங்கப்பட்ட தகவல் சரிபார்க்கப்பட்டுள்ளதுடன்

II. மேற்படி பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்ற தகுதியுடையவர்

என்பதை அத்தாட்சிப்படுத்துகிறேன்

(*பொருத்தமற்ற சொல்லை நீக்கிவிடவும்)

…………………………………………… ……

திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி
முத்திரை.

திகதி: ……………………………………………………

பெயர்: ……………………………………………………

பதவி: ……………………………………………

முகவரி: ……………………………………………………